# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.
பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 4 June 1942 No. 6

விஷய சூசிகை. பக்கங்கள்

ஹிந்து சம்பிரதாய வைத்தியத்தில் சில பிரசித்த ஸ்ரீ 1

ஔஷதசாரம்

ராஜயக்ஷ்மா (பத்திராதிபர்) 1—9

வைத்தியச்செய்தி 9

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள்நாட்டிற்கு ரூ. 2
வெளிநாட்டிற்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
,, ,, ½-க்கு ரூ 4
,, ,, ¼-க்கு ரூ 2

நிர்வாகஸ்தர்:—

Pandit, S. NARAYANA IYENGAR.

**Editor and Publisher.**

ice Station West Lane, Madura.

[விலை 0—3—0

கொடுக்கலாம். மாமிசக்கஷாயமில்லாமல் தனியாகத் தயாரித்த இம்மருந்து பல தடவைகளில் கொடுத்து நல்ல குணம் அனுபவத்தில் கண்டிருக்கிறோம், இந்த நெய் தோய்ந்த பிறகு வெண்ணை போல ஆகிவிடும். அச்சமயத்தில் பூர்ஜமா இலைகளில் 3 தோலா அல்லது இரண்டு தோலாவாக வைத்துச்சுருட்டி ஜாடியில் வைக்கலாம். அது சிரமமாகவிருந்தால் ஜாடியின் அடியிலும் சுற்றுப்பக்கங்களிலும் அந்த இலையை வைத்து நடுவில் இந்த நெய்யைக் கொட்டிவைத்து பத்திரப்படுத்தலாம். பூர்ஜபத்ரம் கிடைக்காவிட்டால் நெய்யை ஜாடியில் பத்திரப்படுத்தி விடலாம். காட்ஸ்லீவர் ஆயில் முதலியவைகளைவிட பன்மடங்கு இது குணம் கொடுக்கும்.

58. பாடாதிசூர்ணம்:—மலைதாங்கிவேர், அதிமதுரம், அடபொதியன்கிழங்கு, மூங்கிலுப்பு, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றல், கோரைக்கிழங்கு, பூலாங்கிழங்கு, கண்டங்கத்திரிவேர், முள்ளிவேர், திராக்ஷை, திப்பிலி, ஏலம், பெருங்கோஷ்டக்கிழங்கு, நன்னாரிவேர், கோஷ்டம், கர்காடக சிருங்கி, (இதைக் கடுக்காய்ப்பூ என்பர்) ரசாஞ்சனம், வெள்ளைச்சாரணத்தி, அயச்செந்தூரம், மருக்கொன்னை, ஓமம், ரித்தி, கீழ்வாய்நெல்லி, சிறுதேக்கு, வாய்விளங்கம், செங்தொட்டி, (இதைச்சிறுகாஞ்சொரி என்பர்) யவக்ஷாரம், கொடுவேலிவேர், செவ்வியம், அம்லவேதஸம், சுக்கு, திப்பிலி, மிள்கு, தேவதாரு இவைகளைச் சமபிடையாக எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து அரைத்தோலா பொடியைத் தேன் அல்லது நெய்யில் குழைத்துச் சாப்பிட க்ஷயகாசம், இருமல், இவை தீரும்.

59. யக்ஷ்மாரி லெளஹம்:—ஸ்வர்ணமாக்ஷிகபஸ்மம், வாய்விளங்கம், கல்மதம், அயசிந்தூரம், கடுக்காய்த்தோல், இவைகளைச் சமபிடையாக எடுத்து கல்வத்திலிட்டுப் பொடித்து பத்திரப்படுத்தவும். தேன், நெய், இந்த அனுபானத்தில் 6 கிரெயின்சு முதல் 10 கிரெயின்சுவரை இந்த மருந்தைத் தினம் இருவேளை உபயோகிக்கவும். சரீரம் புஷ்டியாகும். [illegible] இருந்து க்ஷயரோ

யில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதைத் தனியாக க்ஷயநோயில் கொடுத்தால் அதிக பலன் இராது, இது சரீரத்தைப்புஷ்டிசெய்யக்கூடியது. ஆகையால் க்ஷயநோயில் சரீர வளர்ச்சிக்காக இம் மருந்தை இடையிடையே கொடுக்கலாம். பாண்டு, காமாலை, முதலிய நோய்களும் தீரும்.

## விக்கல்—Hiccup.

60. உளுத்தம்பருப்பை மாவாக அரைத்துத் தணலில் போட்டுப் புகைபிடிக்க விக்கல் தீரும்.

61. சிற்றேலம், ஜீனி, இவைகளைச் சமவிடையாக எடுத்து இடித்து அரைத்தோலாவைத் தேனில் கொள்ள விக்கல் தீரும்.

62. வாழைக்கிழங்கு ரசத்தில் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட விக்கல் தீரும். குறிப்பு:—வாழை என்பது பலவகை, அவற்றுள் ரஸ்தாளி என்ற வாழையின் கிழங்கை இடித்து ஒரு அவுன்சு ரசம் எடுத்து அதில் கால்தோலா ஜீனி சேர்த்துச் சாப்பிடவும். இந்த மூன்று மருந்துகளையும் இரண்டு மணிக்கு ஒரு தடவையாகக் கொடுக்கவேண்டும்.

63. மயில் இறகு சாம்பலையும் திப்பிலிப்பொடியையும் சமவிடையாக எடுத்து அதில் கால்தோலா முதல் அரைத்தோலாவரை தேனில் குழைத்துச் சாப்பிட விக்கல் தீரும்.

64. தான்றிக்காய்பொடி ஒரு தோலா எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிட விக்கல் தீரும். குறிப்பு:—இது மலப்பிரவர்த்தியையும் செய்யும்.

65. அரேணுகம், திப்பிலி, இவைகளைச் சமவிடையாக எடுத்து இடித்து ஒரு தோலாவை ஓர் சட்டியில் போட்டு 16 தோலா அதாவது சின்னப்படியில் கால்படி ஜலம்விட்டு நான்கில் ஒன்றாக வற்றவைத்து வடிகட்டி அதில் வீசம் தோலா வெள்ளைப் பெருங்காயப்பொடியைச் சேர்த்துத் தினம் இருவேளை அல்லது மூன்று வேளை உபயோகிக்க விக்கல் தீரும்.

## ஸ்வரபங்கம்—Hoarseness of voice.

65. ஸாரஸ்வதகிருதம்:—வல்லாரையைச் சமூலமாக எடுத்து நன்ருகச் சுத்தம்செய்து உரலில் இடித்துப் பிழிந்து வடிகட்டின ரசம் சின்னப்படி 4, பசுநெய் சின்னப்படி 1, இவற்றை ஓர் இரும்புச்சட்டியில் போட்டு அதில் மஞ்சள், மல்லிகைவேர், கோஷ்டம், சிவதைவேர், கடுக்காய்த்தோல், ஆகிய இவை வகைக்குத் தோலா 4, திப்பிலி, வாய்விளங்கம், இந்துப்பு, ஜீனி, வசம்பு, ஆகிய இவை வகைக்குத் தோலா 1, இடித்துப் பொடிசெய்துபோட்டு கிருதபதமாகக்காய்ச்சி அரை அவுன்சு முதல் ஒரு அவுன்சு வரை சாப்பிடத் தொண்டைக்கம்மல் தீரும். இது மூளைக்கும் பலத்தைக் கொடுக்கக்கூடியது.

67. நெல்லிவற்றலைப் பொடிசெய்து அரைத்தோலா முதல் ஒரு தோலாவரை ஷை பொடியை சின்னப்படியில் கால்படி பசும்பாலில் கலக்கிச் சாப்பிட தொண்டைக்கம்மல் தீரும்.

68. கலியாண லேஹம்:—மஞ்சள், வசம்பு, கோஷ்டம், திப்பிலி, சுக்கு, ஜீரகம், ஓமம், அதிமதுரம், இந்துப்பு, இவைகளைச் சமயிடையாக எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து ஷை சூர்ணத்தில் அரைத்தோலா எடுத்துப் பசுநெய்யில் குழைத்துச் சாப்பிட தொண்டைக்கம்மல் தீரும்.

69. ஸாரஸ்வதாரிஷ்டம்:—சமூலம் வல்லாரை தோலா 80, சதாவரி, மொதக்கன் கிழங்கு, கடுக்காய், விலாமிச்சவேர், இஞ்சி, சதகுப்பை, இவை வகைக்குத் தோலா 20 எடுத்து அனைத்தையும் இடித்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படியில் 32 விட்டு நான்கில் ஒன்ருக வற்றவைத்து வடிகட்டி ஓர் புதுப்பானையில் அக்கஷாயத்தைப் போட்டு அதில் தேன் தோலா 40, ஜீனி தோலா 100, காட்டாத்திப்பூ தோலா 20, அரேணுகம், சிவதைவேர், திப்பிலி, கிராம்பு, வசம்பு, கோஷ்டம், அமுக்கராவேர், தான்றிக்காய்த்தோல், சீந்திற்கொடி ஏலம், வாய்விளங்கம், சன்னலவங்கப்பட்டை வகைக்குத்தோலா 1 ஆகிய இவைகளை இடித்துப் பொடிசெய்து

போட்டு அதில் தங்கரேக்கு ஒரு தோலாவும் சேர்த்து ஒருமாதம் வைத்திருந்து பிறகு வடிகட்டி வேளைக்கு அரை அவுன்சுவீதம் தினம் இருவேளை சாப்பிடவும். தொண்டைக்கம்மல் தீரும், மூளைக்கு பலம் கொடுக்கும்.

70. இலந்தைத்தழை ஒரு தோலா எடுத்து ஜலம் விடாமல் அரைத்து அல்லது அவசியமானால் சுவல்ப ஜலம்விட்டு அரைத்து ஓர் இரும்பு வாணலியில்போட்டு கால்தோலா இந்துப்பையும் சேர்த்து நெய் ஒரு தோலாவும் விட்டு அடுப்பேற்றிச் சற்று வதக்கி அப்படியே உட்கொள்ளவும், தொண்டைக்கம்மல் தீரும்,

## அரோசகம்.

71. யவானீஷாடவம்,—ஓமம், புளியம்பட்டை, சுக்கு, அம்லவேதசம், மாதளைத்தோல், இலந்தைப்பருப்பு, வகைக்குத்தோலா 1, மல்லிவிதை, சௌவர்சலவணம், ஜீரகம், கிராம்பு, இவை வகைக்கு அரைத்தோலா, திப்பிலி 100, மிளகு 200, ஜீனி தோலா 16, இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு வேளைக்கு அரைத்தோலா உபயோகிக்க அரோசகம் நீங்கும். குறிப்பு:—சர்க்கரை நீங்கலாக மற்றவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு பிறகு அந்தப்பொடியில் சர்க்கரையைச் சேர்த்துக்கொள்ளவும். திப்பிலி, மிளகு, இவைகளை எண்ணி முன்சொன்ன கணக்குப்படி எடுத்துக்கொள்ளவும். பொடியை அப்படியே வாயில் போட்டுக்கொண்டு ஜலமில்லாமல் சாப்பிடுவது சம்பிரதாயம்.

72. சௌவர்சலாதி—:சௌவர்சலவணம், திராக்ஷை, மிளகு, ஜீரகம், பெருஞ்ஜீரகம் (இதைச்சோம்பு என்றும் சொல்லுவதுண்டு) புளியம்பட்டை, மாதளம்தோல், ஜீனி, இவைகளைச் சமபிடையாக எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து ஷை பொடியில் அரைத்தோலா தேனில் கொள்ள அரோசகம் நீங்கும்.

## வாந்தி—Vomiting.

73. கடுக்காய்த்தோல், நெல்லிவற்றல், ஜீனி, நெற்பொரி, தேன் ஆகிய இவைவகைக்குத்தோலா 4, இவைகளை ஓர் மண்சட்டி

யில் போட்டு சுத்தஜலம் சின்னப்படி கால்விட்டு வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்சு வீதம் உபயோகிக்க வாந்தி நிற்கும். குறிப்பு:— தேன், சர்க்கரை நீங்கலாக மற்ற சரக்குகளை நன்றாக இடித்துப் பொடிசெய்து பிறகு எல்லாவற்றையும் சட்டியில் போட்டு இரண்டு மணி சாவகாசம் வைத்திருந்து பிறகு வடிகட்டிக்கொள்ளவும்.

74. கருவாப்பட்டை, பச்சிலை, ஏலம், சக்கு, திப்பிலி, மிளகு, கிராம்பு, ஜீரகம், சிறுநாகப்பூ, தேசாவரம் ஆகிய இவை சம யிடையாக எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து ஷை பொடியில் அரைத்தோலா எடுத்து தேனில் குழைத்துச் சாப்பிட வாந்தி நிற்கும்.

75. இரண்டு அவுன்சு நெல்லிக்காய் ரசத்தில் ஒரு தோலா வெள்ளைச்சந்தனத்தைக் கரைத்துக் சாப்பிட வாந்தி நிற்கும்.

குறிப்பு:—நூல்களில் இவ்விதம் சொல்லப்பட்டாலும் கால் தோலா சந்தன விழுதை ஒரு அவுன்சு நெல்லிக்காய் ரசத்தில் சாப்பிடுவது வழக்கம். பச்சை நெல்லிக்காய் கிடைக்காவிட்டால் நெல்லிவற்றல் கஷாயம் எடுத்துக்கொள்ளலாம்.

76. சீந்திற்கொடியை இடித்துத்தோலா 2 எடுத்து ஓர் மண் சட்டியில் போட்டு அதில் 8 தோலா ஜலம் அதாவது 3½ அவுன்சு விட்டு ராத்திரி முழுவதும் வைத்திருந்து வடிகட்டிக் காலையில் சாப்பிட வாந்தி நிற்கும்.

77. சிறுகாஞ்சொரி (இதை செந்தொட்டி என்றும் சொல்லுவார்கள்) வேரைப் பொடிசெய்து அரைத்தோலா பொடியைத் தேனில் குழைத்துச்சாப்பிட வாந்தி நிற்கும்.

78. மருள் கிழங்கைப் பொடிசெய்து அரைத்தோலா பொடியை அரிசி களைந்த நீர் இரண்டு அவுன்சில் கலக்கிச்சாப்பிட வாந்தி தீரும்.

## தாகம்—Thirst.

**சாரிபாதி கஷாயம்:**—நன்னாரிவேர், விலாமிச்சவேர், நிலக்குமிழம்பழம், இலுப்பைப்பூ, வெள்ளைச்சந்தனம், சிகப்புச்

சந்தனம், அதிமதுரம், ஈச்சம்பழம், இவைகளைச் சமயிடையாக எடுத்து இடித்துப் பொடிசெய்து இரண்டு தோலா பொடியை ஓர் மண் சட்டியில் போட்டு சின்னப்படியில் அரைப்படி ஜலம் விட்டு நான்கில் ஒன்றாக வற்றவைத்து தினம் இருவேளை சாப்பிட தாகம் தணியும்.

80. அத்திக்காயை முன்போல கஷாயம் செய்து சாப்பிட தாகம் தணியும்.

81. கோரைக்கிழங்கு, சிகப்புச்சந்தனம், சுக்கு, விலாமிச்ச வேர், பர்பாடகம், இவைகளைச் சமயிடையாக எடுத்து முன்போலக் கஷாயம்செய்து சாப்பிட தாகம் தணியும்.

82. வடசுங்காதி:—ஆலம் மொக்கு, சர்க்கரை, லோத்திப் பட்டை, மாதளம்தோல், அதிமதுரம், இவைகளைச் சமயிடையாக எடுத்து இடித்துப் பொடிசெய்து அந்தப்பொடியில் அரைத்தோலா எடுத்து அரிசிகளைந்த நீரில் கலக்கிச்சாப்பிட தாகம் தீரும்.

## ஹிருதயரோகம்—Heart disease.

83. பார்த்தாரிஷ்டம்:—வெள்ளை மருத மரத்தின்பட்டை தோலா 400, திராக்ஷை தோலா 200, இலுப்பைப்பூ தோலா 100 இவைகளை இடித்து ஓர் பானையில் போட்டுச் சின்னப்படியில் 128 படி ஜலம்விட்டு 16 படியாக வற்றவைத்து வடிகட்டி அந்தக்கஷாயத்தை ஓர் பானையில் விட்டு அதில் காட்டாத்திப்பூ தோலா 80, சர்க்கரை தோலா 400. (காட்டாத்திப்பூவை மாத்திரம் இடித்துப் பொடிசெய்துகொள்ளவும்)

இவைகளைப் போட்டு ஒரு மாதம் அப்படியே வைத்திருந்து பிறகு வடிகட்டி அரை அவுன்சு முதல் ஒரு அவுன்சு வரை தினம் இருவேளை உபயோகிக்க ஹிருதய ரோகம் நிவர்த்தியாகும்.

84. ககுபாதி சூர்ணம்:—வெள்ளைமருதம்பட்டை, வசம்பு, அரத்தை, குருந்தொட்டி, நாகபலா, கடுக்காய்த்தோல், பூலாங் கிழங்கு, கோஷ்டம், திப்பிலி, சுக்கு, இவைகளைச்சமயிடை எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து கால்தோலா வளவு சாப்பிட

ஹிருதயநோய்கள் விலகும். குறிப்பு:—இம்மருந்தைத் தேனில் குழைத்துச்சாப்பிட்டு முன் சொன்ன அரிஷ்டத்தை அனுபானமாக உபயோகிக்கவும்.

85. சிந்தாமணி:—சுத்தி செய்த ரசம், சுத்திசெய்த கந்தகம், அப்பிரகச்சிந்தூரம், அயச்சிந்தூரம் வங்கபஸ்மம், கல்மதம், வகைக்குத்தோலா 1, சுவர்ணபஸ்மம் தோலா கால், வெள்ளி பஸ்மம் தோலா அரை இவைகளைக் கல்வத்திலிட்டு முதலில் ரசத்தையும் கந்தகத்தையும் சேர்த்து அரைத்துப் பிறகு மற்றவைகளையும் கூட்டி அரைத்து கொடுவேலிக் கஷாயத்தாலும், கரிப்பான் ரசத்தாலும் மருதம்பட்டைக் கஷாயத்தாலும் முறையே வகைக்கு ஏழு பாவனை செய்து குன்றிமணி யளவு உருண்டைசெய்து நிழலில் காயவைத்து வேளைக்கு ஒரு மாத்திரை கோதுமைக் கஞ்சித்தெளிவில் கொடுக்கவும். ஹிருதயரோகம் விலகும். சுவாசப்பைகள் உறுதியாகும்.

## கிருமிரோகம்—Worms.

86 குரோசாணி ஓமம் கால்தோலா முதல் அரைத் தோலா வரை எடுத்து முதல்நாள் எடுத்த நீரால் அரைத்து அந்த நீரில் கலக்கி முதலில் கொஞ்சம் சர்க்கரையைச் சாப்பிட்டு அரை மணி கழித்து அதைச் சாப்பிட வயிற்றிலுள்ள கிருமிகள் சாகும்

87. புரசம் விதை கால்தோலா முதல் அரைத்தோலா வரை எடுத்து தண்ணீரில் ஊரப்போட்டு மேல் தோலியை விலக்கி உள்ளிருக்கும் விதையை நீர் விட்டு அரைத்து நீரில் கலக்கிச் சாப்பிட வயிற்றிலுள்ள கிருமிகள் சாகும்.

88. பச்சை (பழுக்காத) கொட்டைப்பாக்கை எலுமிச்சம் பழ ரசம் விட்டு அரைத்து எலுமிச்சம்பழ ரசத்தில்கலக்கிக் குடிக்க [illegible] குணமுண்டாம்.

89. பேய்ச்சுரை விதை ஒரு தோலாஎடுத்துப்பசுமோர்விட்டு அரைத்து 3 அவுன்சு மோரில் கலக்கிக் குடிக்க முன் குணமுண்

டாம். குறிப்பு:—இம்மருந்துகளை இரண்டு அல்லது மூன்று நாள் சாப்பிட்டுப்பிறகு பேதிக்கு சாப்பிட்டால் கிருமிகள் விழும்.

### அக்னி மந்தம்—பசியின்மை.

90. அக்னிமுக சூர்ணம்:—பால்காயம் தோலா 1, வசம்பு 2, அரிசித்திப்பிலி தோலா 3, சுக்கு தோலா 4, ஓமம் தோலா 5, கடுக்காய்த்தோல் தோலா 6, கொடுவேலிவேர்ப் பட்டை தோலா 7, கோஷ்டம் தோலா 8, இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து ஷை பொடியில் அரைத்தோலா எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிட அக்கினிமந்தம் தீரும். குறிப்பு:—கொடுவேலியில் பல வகையுண்டு. அதில் சிகப்புப்பூ கொடுவேலியில் தோல் எடுப்பது சுலபம். வெள்ளைப்பூ கொடுவேலியில் தனியாகத் தோல் எடுப்பது கஷ்டம். ஆனால் சாஸ்திரங்களில் சிகப்புப்பூ கொடுவேலியை விட வெள்ளைப்பூ கொடுவேலி மிகக் குணமுள்ளதாகவே கூறப்பட்டுள்ளது.

61. வ்யோஷாதி சூர்ணம்:—சுக்கு, திப்பிலி, மிளகு, சிவதைவேர், பஞ்சலவணம், கொடுவேலி வேர்ப்பட்டை, ஜீரகம், யவக்ஷாரம், கடுக்காய்த்தோல், வாய்விளங்கம், தேசாவரம், செவ்வியம், ஆகிய இவைகளைச் சமயிடையாக எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து சுடு நீரில் கலக்கிச்சாப்பிட அக்னிமந்தம் நீங்கும். குறிப்பு:—பஞ்சலவணம் என்பது ஐந்துவகை உப்பு அவையாவன,—இந்துப்பு, சௌவர்சலவணம், பிடாலவணம், சமுத்திர உப்பு, கந்தக உப்பு.

92. பத்யாதி சூர்ணம்:—கடுக்காய்த்தோல், வசம்பு, பிடாலவணம், பால் காயம், சுக்கு, அதிவிடயம், வெப்பாலை யரிசி, ஆகிய இவைகளைச் சமயிடையாக எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து அரைத்தோலா பொடியை வென்னீரில் கலக்கிச் சாப்பிட அக்னிமந்தம் தீரும். தீபன முண்டாகும்.

93. ஹிங்குவாதி சூர்ணம்:—பால்காயம் தோலா 1, வசம்பு தோலா 2, பிடாலவணம் தோலா 3, சுக்கு தோலா 4, ஓமம் தோலா

5, கடுக்காய்த்தோல் தோலா 6, ஆகிய இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து அரைத்தோலா பொடியைத் தேனில் குழைத்து அல்லது வெந்நீரில் கலக்கிச் சாப்பிட அக்னிமந்தம் தீரும்.

94. **அக்னி குமாரன்;**—ரசம், வத்ஸநாபி, கந்தகம், வெங்காரம், வகைக்குத் தோலா 1, மிளகு தோலா 8, சங்க பஸ்மம், சோகி பஸ்மம், வகைக்குத்தோலா 2, இவைகளைக்கல்வத்தில் போட்டு எலுமிச்சம்பழ ரசத்தால் 7 பாவனை செய்து இரண்டு குன்றிமணி யிடையுள்ள மாத்திரையாக உருட்டிக் காயவைத்து ஒரு மாத்திரை உபயோகிக்க அக்னி தீபன முண்டாகும்.

95. **மகாக்ரவ்யாத ரசம்:**—சுத்திசெய்த கந்தகம் 8 தோலா எடுத்து ஓர் இரும்புச்சட்டியில் போட்டு அடுப்பேற்றிஉருகவைத்து அதில் ஒரு பலம் சுத்திசெய்த ரசத்தைப்போட்டு பிறகு தாமிரபஸ்மம் அயச்சிந்தூரம் வகைக்குத்தோலா 2 சேர்த்து அதை ஆமணக்கு இலையில் சாய்க்கவும் ஆறின பிறகு எடுத்து கல்வத்தில்பொடிசெய்து ஓர் இரும்பு பாத்திரத்தில் போட்டு 400 தோலா எலுமிச்சம்பழ ரசத்தை அதில் விடவும். அடுப்பேற்றி மந்தாக்னியாக எரித்துக் காண்டியால் கிளரிக்கொடுக்கவும். பிறகு அதைப் பொடிசெய்து பஞ்சகோல கஷாயம் அம்லவேதஸ கஷாயம் ஆகிய இவைகளால் தனித்தனியாக 50 பாவனை செய்யவும் பிறகு சமயிடை வறுத்த வெங்காரப்பொடி சேர்த்துக் கலந்துகொள்ளவும். வெங்காரத்தில் பாதி யிடை கருப்பு உப்பு சேர்க்கவும். கருப்பு உப்பு வரையிலுள்ள எல்லா சரக்குகளுக்கும் சமயிடையாக மிளகுப்பொடியைச் சேர்க்கவும். பிறகு எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்துக் கடலைப்புளிப்பால் பாவனை செய்யவும். பிறகு வெய்யிலில் உலர்த்திப் பொடிசெய்து சீசாவில் பத்திரப்படுத்தவும். 8 குன்றுமணியிடை தகுந்த அனுபானத்தில் சாப்பிட அக்னிமந்தம் தீரும்.

96. **லகுமார மோதகம்:**—திப்பிலி, தேசாவரம், சுக்கு, மிளகு, கடுக்காய்த்தோல்' செல்விவற்றத் [illegible] வேப்பிடை

அப்பிரகசிந்தூரம், சித்திரக்கொடி, கடுகுரோகிணி, இவை வகைக்குத் தோலா 1, ஜீனி தோலா 12, இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து தேன்விட்டுப்பிசைந்து வைத்துக்கொள்ளவும். வேளைக்குக்கால்தோலா சாப்பிட அக்னிமந்தம் தீரும்.

## மூலரோகம்—Piles.

97. பிராணதாகுடிகா:—சுக்கு தோலா 12, மிளகு தோலா 4 திப்பிலி தோலா 8, செவ்வியம் தோலா 4, தாளிசபத்திரி தோலா 4, சிறுநாகப்பூ தோலா 2, தேசாவரம் தோலா 8. பச்சிலை தோலா அரை, சிறு ஏலம் தோலா ஒன்று, கருவாப்பட்டை விலாமிச்சவேர் வகைக்குத்தோலா அரை, இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து வெல்லம் வீசை ஒன்று பாகுவைத்து அதில் இந்தப் பொடியைப் போட்டு அரைத்தோலாவளவு வடகமாக அல்லது குளிகையாக உருட்டி பத்திரப்படுத்தவும். வேளைக்கு ஒரு குளிகை சாப்பிடவும். குறிப்பு:—வெல்லத்தை ஜலம்விட்டுக் கரைத்து நன்ருகக் கரைந்தவுடன் பொடியைப்போட்டுக் கிளாவேண்டும். வெல்லத்திற்குப் பதிலாக நாட்டுச்சர்க்கரையை எடுத்துக்கொள்ளலாம். இது நல்ல ஜீரணசக்தியை உண்டுபண்ணும். மலபந்தமுள்ளவர்களுக்கு இந்த ஜாபிதாவில் சுக்குக்குப் பதிலாக அந்த ஸ்தானத்தில் கடுக்காய்ப்பொடியை அந்த அளவுப்படி சேர்த்துக்கொண்டு குடிகை செய்யவும். மலபந்தம் நீங்கும்.

98. சந்திரபிரபாகுடிகா:—வாய்விளங்கம், கொடிவேலிவேர் சுரிகு, திப்பிலி, மிளகு, கடுக்காய்த்தோல், தான்றித்தோல், நெல்லிவற்றல், தேவதாரு, செவ்வியம், நிலவேம்பு, தேசாவரம், கோரைக்கிழங்கு, பூலாங்கிழங்கு, வசம்பு, சுவர்ணமாக்ஷிகச் சிந்தூரம், இந்துப்பு, யவக்ஷாரம், சத்திக்ஷாரம், மஞ்சள், மரமஞ்சள், கொத்தமல்லி விதை, யானைத்திப்பிலி, அதிவிடயம் ஆகிய இவை வகைக்குத்தோலா 1, கல்மதம் தோலா 32, குக்கில் தோலா 32, அயச்சிந்தூரம் தோலா 8, ஜீனி தோலா 16, மூங்கிலுப்பு, சிவதைவேர், தந்தி[illegible]ட்டை, ஏலம், பச்சிலை, ஆகிய இவை வகைக்கு[illegible] ஒன்று, இடித்து வஸ்திரகாயம் செய்து கொண்டு

அதில் சுத்திசெய்த ரசம், சுத்திசெய்த கந்தகம், வகைக்குத்தோலா 2, அப்பிரகச்சிந்தூரம் தோலா 4 சேர்த்து மாத்திரை செய்து நான்கு குன்றிமணியிடை ஆரம்பித்து கொஞ்சம் கொஞ்சமாக அளவை உயர்த்தி கால்தோலா யிடைவரையில் சாப்பிடவும். குறிப்பு ஓர் இரும்புச்சட்டியில் சுமார் அரைப்படி ஜலம்விட்டு அடுப்பேற்றி அதில் முதலில் குக்கிலேப் (நன்ருகப்பொருக்கி எடுத்துப்பொடிசெய்த)போட்டு நன்ருகக்கரையும்படி செய்யவும். பிறகு அதில் கல்மதத்தைப் போட்டுச் சிறுதீயிட்டுக் கரையும்படி செய்யவும். இது இரண்டும் நன்ருகக்கரைந்த பிறகு அவசியமானல் மறுபடியும் கொஞ்சம் ஜலம் விட்டுக்கொள்ளவும். பிறகு அதில் மூன்று சிந்தூரங்களைப் போடவும். ரசத்தையும் கந்தகத்தையும் கல்வத்தில் அரைத்து அந்தப்பொடியை அதில் போடவும். பிறகுமற்றச்சரக்குகளை இடித்து வஸ்திரகாயம் செய்து அதில் போட்டுக் கிளரவும். மெழுகுபதம் வரும் சமயம்பார்த்து அரைக்கால்படி பசுநெய்யை அதில் விட்டுக்கிளறி எடுத்து மாத்திரை முன்சொன்ன அளவுப்படி உருட்டவும். இந்த மருந்து சார்ங்கதரசம்ஹிதை முதலியவைகளில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனல் அதில் ரசம், கந்தகம், அப்பிரகசிந்தூரம், ஆகிய இவை சேர்க்கச்சொல்லவில்லை. இந்தப் பிரயோகம் பைஷஜ்ய ரத்னுவளியில் சொல்லப்பட்டிருக்கின்றது. இது சிலருககு மலபந்தம் செய்யும். ராத்திரி படுக்கும் சமயத்தில் சற்று விளக்கெண்ணெ உபயோகித்தால் அந்த தோஷம் விலகும்.

99. அபயாரிஷ்டம்:—கடுக்காய்த்தோல் தோலா 400 இடித்து ஓர் பானையில் போட்டு அதில் திராக்ஷை தோலா 200, வாய்விளங்கம் தோலா 40, இலுப்பைப்பூ தோலா 40 போட்டுச் சின்னப்படி 128 படி ஜலம்விட்டு அடுப்பேற்றி சின்னப்படி 32 படியாக வற்றவைத்து வடிகட்டி ஓர் பானையில் விட்டு வெல்லம் அல்லது நாட்டுச் சர்க்கரை தோலா 400 அதில் சேர்த்து சிறுநெரிஞ்சில்வேர், சிவதை வேர், மல்லிவிதை, காட்டாத்திப்பூ, பேய்க்கொம்மட்டிவேர், செவ்வியம், சதகுப்பை, சுக்கு, தந்திவேர், இலவம்பிசின், வகைக்குத் தோலா 8 எடுத்து இடித்துப்பொடிசெய்து அதில் போட்டு, வாய்

மூடி அசையாமல் ஒரு மாதம் வைத்திருந்து பிறகு தெளிவாக வடி கட்டி பத்திரப்படுத்தவும். வேளைக்கு ஒரு அவுன்சு வீதம் தினம் இரண்டுவேளை உபயோகிக்க மூலநோய் தீரும். இது பைஷஜ்ய ரத்னவளியில் சொல்லப்பட்டிருக்கின்றது.

100. அபயாரிஷ்டம்:-கடுக்காய்த்தோல் தோலா 32, நெல்லி வற்றல் தோலா 64, விளாம்பிஞ்சு தோலா 40, பேய்க்கொம்மட்டி வேர் தோலா 20 லோத்திப்பட்டை, மிளகு, திப்பிலி, வாய்விளங் கம், ஏலாவாலுகம், ஆகிய இவை வகைக்குத் தோலா 8, இவைகளை இடித்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படியில் 64 படிவிட்டு அடுப்பேற்றி நான்கில் ஒன்றாக வற்றவைத்து வடிகட்டி அதை ஓர் பானையில் போட்டு அதில் வெல்லம் அல்லது நாட்டுச்சர்க்கரை தோலா 400, காட்டாத்திப்பூ தோலா 64, இடித்துப் பொடிசெய்து போட்டு பானையில்மூடி ஒரு மாதம் அசையாமல் வைத்திருந்து பிறகு வடிகட்டி பத்திரப்படுத்தவும். முன்போல உபயோகிக்கவும். மூலம் தீரும். இது அஷ்டாங்க ஹிருதயத்தில் சொல்லப்பட்டிருக் கின்றது.

101. தந்தி அரிஷ்டம்:—தந்திவேர், தசமூலம், கடுக்காய் கொடுவேலிவேர், வகைக்குத்தோலா 4 இடித்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படியில் 32 படி விட்டு அடுப்பேற்றி நான்கில் ஒன்றாக வற்றவைத்து வடிகட்டி அதை ஓர் பானையில்போட்டு அதில் வெல்லம் அல்லது நாட்டுச்சர்க்கரை தோலா 400 சேர்த்து அதில் காட்டாத்திப்பூ தோலா 64 இடித்துப்பொடிசெய்து போட்டு வாய் மூடி ஒரு மாதம் வைத்திருந்து வடிகட்டி முன்போல உபயோகிக்க வும். மூலம் தீரும். மலபந்தம் விலகும்.

102. பாடாதி:—மலைதாங்கிவேருடன் சிறுகாஞ்சொறிவேர், பில்வவேர், ஓமம், சுக்கு, இவைகளில் யதாலாபம் கிடைப்பதைச் சேர்த்து உபயோகிக்க மூலக்கடுப்பு தீரும். குறிப்பு:—மலைதாங்கி வேருடன் மற்ற சரக்குகளில் ஒன்று அல்லது இரண்டு, மூன்று கிடைத்தமட்டில் சேர்த்துக் கஷாயம் செய்து சாப்பிட மூலத்தில் உண்டாகும் வேதனை நீங்கும்.

103. துராலபாரிஷ்டம்:-சிறுகாஞ்சொரி (இதை செந்தொட்டி என்பர்) தோலா 64, தந்திவேர், மலைதாங்கிவேர், கொடுவேலிவேர், கடுக்காய்த்தோல், ஆடாதோடை, நெல்லிவற்றல், சுக்கு, ஆகிய இவை வகைக்குத்தோலா 8, இடித்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி 32 விட்டு நான்கில் ஒன்ருக வற்றவைத்து வடிகட்டி ஓர் பானையில்போட்டு அதில் நாட்டுச்சர்க்கரை தோலா 400 போட்டு, காட்டாத்திப்பூ தோலா 64 இடித்துப்பொடி செய்து அதில்போட்டு வாய்மூடி ஒருமாதம் வைத்திருந்து வடிகட்டி எடுத்து வேளைக்கு ஒரு அவுன்சு வீதம் உபயோகிக்க மூலம் தீரும்.

104. ஆமலகாரிஷ்டம்:—புதிய நெல்லிவற்றல் தோலா 400, திப்பிலி, சிறுநாகப்பூ, வகைக்குத் தோலா 16, செவ்வியம், கொடுவேலிவேர், பாக்குமரவேர், லோத்திப்பட்டை, மலைதாங்கிவேர், மிளகு, வாய்விளங்கம், மஞ்சிஷ்டி, ஏலாவாலுகம், தேசாவரம், வகைக்குத்தோலா 4, மரமஞ்சள், சதகுப்பை, வெப்பாலையரிசி, நன்னரிவேர், மாகாளிவேர், கோரைக்கிழங்கு, கோஷ்டம் வகைக்குத்தோலா 2, இவைகளை இடித்து ஓர் பானையில் போட்டு சின்னப்படியில் 64 படி ஜலம்விட்டு அடுப்பேற்றி சரிபாதியாக வற்றவைக்கவும். அதை வடிகட்டி ஓர் பானையில் போட்டு அதில் திராக்ஷாரசம் 32 படி விட்டு அதில் சர்க்கரை தோலா 800, தேன் தோலா 64, சேர்த்து கருவாப்பட்டை, ஏலம், லோத்திப்பட்டை, பெருங்கோரைக்கிழங்கு, சுக்கு, வெட்டிவேர், விலாமிச்சவேர், பாக்குமரவேர், சிறுநாகப்பூ, வகைக்குத் தோலா இடித்துப் பொடிசெய்து போட்டு வாய்மூடி ஒரு மாதம் வைத்திருந்து பிறகு வடிகட்டி முன் போல சாப்பிட மூலம் நீங்கும்.

105. ஸ்ரீ பாகுசாலகுடம்:—சிவ்தைவேர், செவ்வியம், தந்திவேர், சிறுநெஞ்சில்வேர், கொடுவேலிவேர், பூலாங்கிழங்கு, பேய்க்கொம்மட்டிவேர், கோரைக்கிழங்கு, சுக்கு, வாய்விளங்கம், கடுக்காய்த்தோல், வகைக்குத் தோலா 4, சேங்கொட்டை (இதை சேராங்கொட்டை எனவும் சொல்லுவதுண்டு) தோலா 32, விருத்ததாரகம் தோலா 24, காட்டுக்கரணைக்கிழங்கு தோலா 64, இவைகளை

இடித்து ஓர் பானையில் போட்டு சின்னப்படியில் 64 படி ஜலம் விட்டு அடுப்பேற்றி நான்கில் ஒன்றாக வற்றவைத்து வடிகட்டி அந்தக் கஷாயத்தை ஓர் இரும்புச்சட்டியில் விட்டு அதில் வெல்லம் அல்லது நாட்டுச்சர்க்கரை தோலா 492 சேர்த்துப் பாகுவைத்துக் கீழே இறக்கி அதில் சிவதைவேர், செவ்வியம், காட்டுக்கரணைக்கிழங்கு, கொடுவேலிவேர்ப்பட்டை, வகைக்குத்தோலா 8, ஏலம், சன்ன லவங்கப்பட்டை, மிளகு, சிறுநாகப்பூ, வகைக்குத் தோலா 24, இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து பொடியைப் போட்டுக் கிளரி பத்திரப்படுத்தவும். வேளைக்கு அரைத்தோலா முதல் ஒரு தோலாவரையில் சாப்பிடவும். குறிப்பு:—இதில் தேன், நெய், சேருவதில்லையாகையால் இதைக்கிளரி முடிந்த பிறகு வடகம் அல்லது குளிகைபோல உருட்டி வெய்யிலில் காயவைத்து பத்திரப் படுத்தவேண்டும்.

106. சுவல்பசூரண மோதகம்:—மிளகு தோலா 4, சுக்கு தோலா 8, கொடுவேலிவேர்ப்பட்டை தோலா 16, காட்டுக்கரணைக் கிழங்கு தோலா 32. இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து அந்தப் பொடியை 60 தோலா வெல்லத்தைப் பாகுவைத்து அதில் போட்டுக்கிளரி பிறகு வெய்யிலில் உலர்த்திக்கொள்ளவும். மூலம் ரத்தமூலம் நீங்கும். வேளைக்கு அரைத்தோலா முதல் 1 தோலா வரை சாப்பிடவும். குறிப்பு:—இதில் வெல்லம் அளவு குறைவாக இருப்பதால் பாகுபதம் வந்தபிறகு பொடியைப்போட்டுக் கிளரினால் பொடி மிஞ்சிப்போகும். ஆகையால் வெல்லம் நன்றாகக் கரைந்தவுடனேயே பொடியைப்போட்டுக் கிளரி வடகமாகவோ அல்லது குளிகைகளாகவோ உருட்டி வெய்யிலில் காயவைத்துக்கொள்ளவும்

107. மகாசூரண மோதகம்:—காட்டுக் கரணைக்கிழங்கு தோலா 64, கொடுவேலிவேர்ப்பட்டை தோலா 32, சுக்கு தோலா 16, மிளகு தோலா 8, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல் நெல்லிவற்றல், திப்பிலி, தேசாவரம், தாளிசபத்திரி, சேங்கொட்டை வாய்விளங்கம், ஆகிய இவை வகைக்குத்தோலா 16, நிலப்பனைக் கிழங்கு தோலா 32, விருத்ததாரகம் தோலா 64, சன்னலவங்கப்

பட்டை ஏலம், வகைக்குத்தோலா 8, இவைகளை இடித்து வஸ்திர காயம்செய்து ஓர் இரும்புச்சட்டியில் வெல்லம் தோலா360 போட்டு பாகுவைத்து அதில் முன் வஸ்திரகாயம் செய்த பொடியைப்போட்டுக்கிளரி வடகமாகவோ அல்லது குளிகைகளாகவோ உருட்டி வெய்யிலில் காயவைத்துக்கொள்ளவும். வேளைக்கு அரைத்தோலா முதல் ஒரு தோலாவரை உபயோகிக்கவும். மூலம் முதலியவைகள் நீங்கும்.

108. **நாகார்ஜுன யோகம்:**—கடுக்காய்த்தோல், தான்றித்தோல், நெல்லிவற்றல், பஞ்சலவணம், கோஷ்டம், கடுகுரோகிணி, தேவதாரு, வாய்விளங்கம் வேப்பமுத்து, குருக்கொட்டி, பெருங்குருக்கொட்டி, மஞ்சள், மரமஞ்சள், சூரியகாந்தம் இவைகளைச்சமயிடையாக எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து அந்தப்பொடியில் புங்கம்பட்டை ரசத்தை விட்டுப்பிசைந்து இலந்தைக்கொட்டையளவு உருட்டி நிழலில் உலர்த்திபத்திரப்படுத்தவும். இதைப்பலவித அனுபானங்களுடன் உபயோகிக்கப் பல நோய்கள் தீரும். குறிப்பு:—வேப்பம்முத்து என்பது வேப்பம்பருப்பு, சூரியகாந்தமென்பது ஓர் செடி. அவன் வேரை எடுத்துக்கொள்ளவும். இதற்கு வடமொழியில் சூரியாவர்த்தமெனப்பெயர்.

109. **விஜயசூர்ணம்:**—சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய்த்தோல், தான்றிக்தோல், நெல்லிவற்றல், சன்னலவங்கப்பட்டை, பச்சிலை, ஏலம், வசம்பு, வெள்ளைக்காயம், மலைதாங்கிவேர், யவக்ஷாரம், மஞ்சள், மரமஞ்சள், செவ்வியம், கடுகுரோகிணி, வெப்பாலையரிசி, கொடுவேலிவேர்ப்பட்டை, சதகுப்பை, பஞ்சலவணம், தேசாவரம், பில்வவேர், ஓமம், இவைகளைச் சமயிடையாக எடுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து அந்தப்பொடியில் அரைத்தோலா எடுத்து ஆமணக்கு எண்ணெயில் குழைத்துச் சாப்பிட மூலம் தீரும்.

110. **குடஜலேஹம்:**—வெப்பாலைப்பட்டை தோலா 400, இடித்து ஓர் பானையில்போட்டு சின்னப்படியில் 32 படி ஜலம் விட்டு எட்டில் ஒன்றாக வற்றவைத்து வடிகட்டி அதை ஓர் இரும்புச்சட்டியில் போட்டு அதில் சேங்கொட்டை, வாய்விளங்கம், சுக்கு.

மிளகு, திப்பிலி, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், செவ்வி வற்றல், ரஸாஞ்சனம், கொடுவேலிவேர்ப்பட்டை, வெப்பாலையரிசி வசம்பு, அதிவிடயம், பில்வவேர், வகைக்குத்தோலா 4 இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு முந்தின கஷாயத்தில் வெல்லம் தோலா 120 சேர்த்துப் பாகுவைத்து அதில் இந்த வஸ்திரகாயம் செய்த பொடியைப்போட்டுக்கிளரி தேன், நெய், வகைக்குத்தோலா 32 விட்டு நன்றாகக்கிளரி பத்திரப்படுத்தவும். வேளைக்கு அரைத்தோலா முதல் ஒரு தோலா வரை சாப்பிட மூலங்கள் தீரும்.

## அதிசாரம்—Diarrhoea—Dysentery.

111. குடஜாரிஷ்டம்:—வெப்பாலைப்பட்டை தோலா 400 திராக்ஷை தோலா 200, இலுப்பைப்பூ, நிலக்குமிழம்பழம் அல்லது வேர் வகைக்குத்தோலா 40, இவைகளை இடித்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படியில் 128 படி விட்டு 32 படியாக வற்ற வைத்து வடிகட்டி ஓர் பானையில் போட்டு அதில் காட்டாத்திப்பூ தோலா 80 இடித்துப் பொடிசெய்துபோட்டு நாட்டுச்சர்க்கரை தோலா 400 சேர்த்து வாய்மூடி ஒரு மாதம் வைத்திருந்து வடிகட்டி வேளைக்கு அரை அவுன்சு முதல் ஒரு அவுன்சுவரை சாப்பிட அதிசாரம், கடுப்பு, தீரும்.

112 பப்பூலாரிஷ்டம்:—கருவேலம்பட்டை தோலா 800 இடித்து ஓர் பானையில் போட்டு அதில் சின்னப்படியால் 128 படி ஜலம்விட்டு அடுப்பேற்றி 32 படியாக வற்றவைத்து வடிகட்டி அந்தக்கஷாயத்தை ஓர் பானையில் போட்டு வெல்லம் அல்லது நாட்டுச்சர்க்கரை தோலா 1200 சேர்த்து அதில் காட்டாத்திப்பூ தோலா 64, திப்பிலி தோலா 8, ஜாதிக்காய், வால்மிளகு, சன்னலவங்கப்பட்டை, ஏலம், பச்சிலை, சிறுநாகப்பூ, கிராம்பு, மிளகு, வகைக்குத்தோலா 4 இவைகளை இடித்துப் பொடிசெய்து போட்டு வாய்மூடி ஓர் மாதம் அப்படியே வைத்திருந்து பிறகு வடிகட்டி வேளைக்கு அரை அவுன்சு முதல் சாப்பிட அதிசாரம் நீங்கும்.

# ராஜயக்ஷ்மா (பத்திராதிபர்)

இந்நோயைப்பற்றி விரிவாக பல வியாசங்கள் சந்திரிகையில் ஏற்கனவே வெளிவந்துள்ளன. சுவாசாசயத்தைப்பற்றி உண்டாகும் இந்நோயில் பலவிதங்கள் காணப்படுகின்றன. பல பேதங்களிருந்த போதிலும் அவைகளில் சிகித்சையை யொட்டின பேதங்கள் இல்லாததால் அவைகளை விவரிக்கவேண்டியது அவசியமாக இருக்கவில்லை. ஆனால் வைத்தியர்கள் முக்கியமாக கவனிக்கவேண்டிய பேதங்கள் இரண்டு இருக்கின்றன. ரக்த வாந்தியுடன் கூடியது என்றும் ரக்த வாந்தியுடன் சேராததும் என்றும் இருவகையாக இருக்கின்றன. ரக்த வாந்தியுடன் கூடிய வகையை இரண்டுவிதமாகப் பிரிக்கலாம். ஏராளமாக ரக்தம் வாந்தியாவது முதல் தினுசாகும். இவ்வகையில் நுரையீரல்களிலிருந்து ரக்தம் ஏராளமான அளவில் வாந்தியாகின்றது. இது மிகக்கடுமையான வகையுமாகும். சிலருக்கு இந்த ரக்த வாந்தி மருந்தில்லாமலே நின்றுவிடுகின்றது. இதை ஆங்கிலத்தில் spontaneous cure என்கின்றனர். பெரும்பான்மையானவர்களுக்கு இது மிகக்கடுமையாக விருக்கின்றது. இருமல் உண்டாகி வெளிப்படும் கபத்துடன் ரக்த ரேகைகள் கலந்திருப்பதும் அல்லது அல்ப அளவு ரக்தம் கலந்து விழுவதும் மற்றொருவகையாகும். முன் வகையைப்போல அந்த இரண்டாவது வகை அவ்வளவு கடினமல்ல. இது ரக்தஷ்டீவனம் என நூல்களில் காணப்படுகின்றது ரக்தம் விழாத ஓர் வகையும் காணப்படுகின்றது. நமது அனுபவத்திற்கு வந்த இருபது நோயாளிகளில் ஒருவருக்குக்கடுமையான ரக்த வாந்தியும் ஒன்பதுபேர்களுக்கு அல்பமான ரக்தஷ்டீவனமும் மற்றும் பத்துப்பேர்களுக்கு ரக்தம் விழாமலும் இருந்தது. ஆகவே கடுமையான ரக்தவாந்தி என்பது அபூர்வமான சம்பவமாகத் தெரிகிறது. ரக்தத்துடனும் ரக்தமில்லாமலும் இருக்கும் க்ஷயரோகங்களுக்குச் சிகித்சையில் மாறுபாடுகள் அவசியமாகின்றன. இந்த நோயில் [illegible] பரிசயமும் அனுபவமும் கொண்ட ஓர் நிபுணர்தான் கையாண்டுவந்துள்ள மருந்துகளை வெளியிட்டுள்ளார்கள். அதைக் கீழே விவரிக்கின்றோம். அந்த நிபுணர் கூறுவதாவது—"உலோஹங்களில் தங்கம் ஓர் உயர்ந்த வஸ்து. இதைப்பற்றி வாக்படர்

"நஸஜ்ஜதே ஹேமபாங்கே பத்மபத்ரேம்புவத் விஷம் | ஜாயதே விபுலம் சாயு: கரேப்யேஷ விதி: ஸ்ம்ருத: || தாமரை யிலையில் நீர் ஒட்டாமல் போவதுபோலத் தங்கத்தைச் சாப்பிடுகிறவன் சரீரத்தில் மூலிகை விஷங்களும் ஜீவர்ணு விஷங்களும் (bacterial) ஒட்டாமல் போகின்றன. என்று கூறியுள்ளார். ராஜயக்ஷ்மாபோன்ற எலும்புருக்கி நோய்களில் தங்கம் ஓர் கூட்டுச்சரக்காகச் சேருகின்றது. "தங்கம்-பவழம்" சேர்ந்து தயாரிக்கப்படும் பரம்பரையாக வந்துள்ள ஓர் மருந்து ராஜயக்ஷ்மாவில் மிகுந்த குணம் கொடுக்கின்றது. க்ஷய நோயாளிக்கு இம்மருந்தை உபயோகித்தால் பசி தீபனம் உண்டாகின்றது. கண்டிப்பாகக் காய்ச்சலைத் தணிக்கின்றது. சரீர எடை அதிகப்படுகின்றது. இராக்கால வியர்வை தீருகின்றது. இருமல் தணிகின்றது. கபம் சுலபமாக வெளிப்படுகின்றது. இம்மருந்தை உபயோகிக்கும்பொழுது நோயாளிகளுக்கு ஸந்தர்ப்பண சிகித்சையை யொட்டி தினம் வேகவைத்த கோழி முட்டைகள் ஆறு, மூன்றுமுதல் நான்கு பைண்ட்பால், டோமடோஸ் 12 அவுன்சு, தேன் ஆறு அவுன்சு, ராகிக்கஞ்சி ஒரு பைண்ட், சோறு, நெய், காய்கறி, மாமிச சூப், பாதாம்பருப்பு நான்கு அவுன்சு, ரொட்டி 12 அவுன்சு, வெண்ணெ 6 அவுன்சு, மோர் ஆகிய இவை ஆகாரமாகக் கொடுக்கப்பட்டுவந்தது. தினப்படி இந்த ஆகாரம் சாப்பிட்டால் சாதாரணமாக ஒரு மனிதன் அஜீர்ண பேதியால் வருந்த நேரிடும். ஆனால் இதை உட்கொண்ட நோயாளிகள் இந்த ஆகாரத்தை ஜரித்துக்கொண்வதுடன் அதிக ஆகாரத்தையும் அபேக்ஷித்தனர், இந்த மருந்தோடு அடியில்கண்ட மருந்துகளையும் சமயத்திற்கேற்றபடி உபயோகிக்கலாம்.

1. பூநிம்பகுடூசீ கஷாயம்—நிலவேம்பு தோலா 6, சீந்திற்கொடி தோலா 4, ஆடாதோடை தோலா 4, கண்டங்கத்திரி தோலா 4, துளசி தோலா 6, கோரைக்கிழங்கு தோலா 4, சுக்கு தோலா 5, இவைகளை இடித்து ஒருபடி ஜலம்விட்டு எட்டில் ஒன்ருக வற்ற வைத்துக் கஷாயம்செய்து வடிகட்டி வேளைக்கு இரண்டு அவுன்சு கஷாயத்தில் தேன் அரைக்கால் அவுன்சு சேர்த்துத் தினம் மூன்று வேளை கொடுக்கவும்.

2. பாஸ்கர லவணம்:—இந்தப்பிரசித்தமான சூர்ணத்தில் 15 கிரெயின்ஸ்சு எடுத்துத் தயிர் நீர் அல்லது வெந்நீரில் காலை, பகல், சாயங்காலம், இவ்விதம் தினம் மூன்றுவேளை உபயோகிக்கவும். (குறிப்பு:-இதன் செய்முறையை ஔஷதசாரம் 83-வது பக்கத்தில் பார்க்கவும்)

3, ஆகாரகரபாதி வடகம்:-அக்கராகாரப்பொடி 5 கிரெயின்சு சுக்குப்பொடி, திப்பிலிப்பொடி, அரத்தைப்பொடி, அபினி, கர்ப்பூரம், வகைக்கு கிரெயின்சு ஒன்று, அதிமதுரப்பொடி கிரெயின்சு 3, அதிமதுரப்பால் கிரெயின்சு 2, இவைகளைக் கல்வத்திலிட்டு ஆடாதோடை சமூலம் ரஸத்தாலும், கண்டங்கத்திரி ரஸத்தாலும் துளசி ரஸத்தாலும் வரிசையாகஒவ்வொன்றுலும் தினம் ஆறுமணி சாவகாசம் வீதம் மூன்றுநாள் அரைத்துக்கடைசியில் வடகமாக உருட்டுவதற்குத் தேவையான தேனைவிட்டுக்கலந்து வடகமாக உருட்டி மூன்று பாகமாகச் செய்து ஒரு பாகத்தை வாயில் அடக்கிக்கொள்ளவும். இவ்விதம் மூன்று பாகத்தையும் ஒரு நாளில் உபயோகிக்கவும்.

4. ச்யவனப்பிராச லேஹம்:—வேளைக்கு ஒரு தோலா அளவில் தினம் இரண்டுவேளை அதாவது காலையிலும் சாயங்காலத்திலும் உபயோகிக்கவும். (ச்யவனப்ராசலேஹத்தை வைத்தியசாரம் 166-வது பக்கத்தில் பார்க்கவும்.)

5. ரக்தவாந்திக்கு:-பவழம் கிரெயின்சு 5. அரக்கு கிரெயின்சு 10, இவைகளைத் தேனில் குழைத்துக் கொடுக்கவும். 24 மணிகளில் முன் சொன்னபடி 4 முதல் 6 வேளை ஷை மருந்தை உபயோகிக்கலாம். இரண்டொரு நாளில் ரக்தம் நின்றுவிடும். ரக்தவாந்தி கடுமையாக யிருந்தால் அப்பொழுது முன் சொன்ன மருந்தை கொடுப்பதுடன் calcium gluconate 10 CC. மருந்தை celin CC. உடன் சேர்த்து ரகதக்குழாயில் இன்ஜக்ஷன் செய்யவேண்டும். இந்த சிகித்சையை தினம் ஒரு தடவையும் சில சமயங்களில் இரண்டு தடவையும் வியாதியின் கடுமையை அனுசரித்துச் செய்ய வேண்டும்.

6. இருமல்:—இருமல் தொந்திரவு அதிக மிருந்தால் அப்பொழுது முன்சொன்ன பூநீம்பகுடுச்யாதி கஷாயத்துடன் கொடீன் ஸிரப் (syrup codiene) ஒரு டிராம்சேர்த்து (ஒவ்வொரு தடவையிலும் கஷாயத்துடன் சேர்த்து)க் கொடுக்கவேண்டும்,

7. மார்பைன்:–Morphine என்ற மருந்தை ஒன்று அல்லது இரண்டுதடவை ரக்தவாந்தியுள்ள கேசுகளில் கையாடநேர்ந்தது.

இவ்விதம் டெி க்ஷயரோக நிபுணர் கூறியுள்ள விஷயங்களை சுதேச வைத்தியர்கள் தீர விசாரித்தே பின்பற்ற வேண்டியது அவசியமாகின்றது.

க்ஷயரோகமும்தங்கத்தின் உபயோகமும்.

க்ஷயரோகத்தில் தங்கம் எந்த அளவு நன்மைசெய்கின்றதென்பதை முதலில் கவனிக்கவேண்டும். செயற்கை இயற்கை விஷங்களால் தொந்திரவுபடும் நோயாளிக்கு முதலில் தாமிரசூர்ணத்தைக் கொடுத்து விஷாம்சத்தைப் பரிஹரித்துப் பிறகு தங்கத்தைக் கொடுத்து நிச்சேஷ நிவர்த்தியைச் செய்யும்படி வாக்படர் கூறுகிறார். உண்மையில் தங்கத்தால் மாத்திரம் விஷம் முறிந்துவிடுவதாகில் தாமிர சூர்ணத்தைக் கொடுக்கும்படி முதலில் வாக்படர் கூறியிருக்கமாட்டார். ஆகவே தாமிரம், தங்கம், இந்த இரண்டும் சேர்ந்து விஷங்களை முறிப்பதாக ஆசிரியரின் அபிப்பிராயம் காணுகின்றது. நவீனர்கள் சொல்லும் Bacteria விஷங்களைத் தங்கமோ அல்லது தாமிரமோ பரிஹரிக்குமென்று வசனம் வியக்தமாகக் கூறவில்லை. நவீனர்கள் தங்கத்தை (Sanocrysin) உபயோகப்படுத்துவதைக்கண்டு நாமும் அதைப்பின்பற்ற வேண்டுமென்பதும் சரியல்ல. தங்கத்தை உபயோகிக்கும் நவீனர்களே அம்மருந்தில் இன்னும் பூர்ணபலனைக் காணவில்லை, அதுமாத்திரமின்றி சேது முதல் ஹிமாலயம்வரையிலுள்ள சுதேச வைத்தியர்கள் பெரும்பாலோர் தங்க சிந்தூரம் செய்தும் அதை டெி வியாதியில் உபயோகித்தும் இருக்கின்றனர், தக்காலம் உபயோகித்துக்கொண்டும் வருகின்றனர். தங்கத்தில்எதிர்பார்த்த குணம் கிடைக்காமல் இருப்ப

னுடன் ஏமாற்றமும் அடைந்திருப்பதைப்பலர் அறிவர். தனித்தங்க சிந்தூரம்பலனளிக்கவில்லை யென்பதைப் பலகாலும் நாம்பார்த்திருக் கிறோம் தவிர க்ஷயரோகத்திற்குத் தங்கம் முக்கியமருந்தென நமது நூல்களும்கூறவில்லை. தமிழ் நூல்களிலும் ஸம்ஸ்கிருத நூல்களிலும் "க்ஷயத்திற்கு ராஜா தாளகம்" என்பது விபக்தமாகக் காணப்படு கின்றது, ஆராய்ச்சிமூலமாக ஓர் தத்துவத்தைக் கண்டுபிடிக்கும் பொழுது பல நூல்களையும் பல விஷயங்களையும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. க்ஷயரோகம் உண்மையில் நிவர்த்தியாகக் கூடிய ரோகமா? என்பது முதல் பிரச்னையாகும். ஏனெனில்

பரம் தின ஸஹஸ்ரம் து யதி ஜீவதி மாநவ: |
ஸபிஷக்பி ருபக்ராந்த: தருண: சோஷ பீடித: |

க்ஷயநோயாளி வாலிபதசையிலுமிருந்து நல்ல கெட்டிக்கார வைத் தியனுடைய சிகித்சையையும் பெற்றுமிருந்தால் அதிக பக்ஷமாக ஆயிரம் நாள் உயிருடன் இருந்தால் இருக்கலாம். என்று வசனம் கூறுகின்றது. இவ்வசனம் பாவப்பிரகாசம், பிருந்த மாதவம், மாதவ நிதான வியாக்யானம், ஆகிய இவைகளில் காணப்படுகின்ற றது. ஆகவே இந்த ரோகம் பரிஹரிக்கக்கூடியதா என்பது முக்கியக் கேள்வியாகின்றது. சரகம், சுசுருதம், வாக்படம், ஆகிய நூல்களே நமக்கு ஆர்ஷமானப் பிரமாண நூல்கள், இவைகளுக்கு விரோத மில்லாமல் மற்ற வசனங்களுக்கு அர்த்தம் செய்யவேண்டியது. பண்டிதர் கடமை. ஆர்ஷ நூல்களில் இந்நோய்க்குப்பல சிகித்சை யும் சாத்தியாசாத்திய விவரங்களும் காணப்படுகின்றன. ஆகவே. அசாத்தியமெனக் கருதப்படும் நிலைமையில் நோயாளிக்கு ஆயிரம் நாட்களை ஜீவியகாலமாகச்சொல்லுவதாக இவ்வசனத்தைப்பொருள் படுத்தவேண்டும். விருத்த வாக்படத்தில் ஸூத்ரஸ்தானம் 13வது அத்தியாயத்தில் "நாகபலாப்யாஸ: க்ஷதக்ஷயக்நாநாம்" என்ற வச னம் காணப்படுகின்றது. பஞ்சகாஸங்களை வாக்படர் விவரிக்கும் பொழுது க்ஷதகாஸம், க்ஷயகாஸம், என இரு வகை காஸங்களைச் சொல்லியுள்ளார்.

இத்யேஷ க்ஷயஜ: காஸ: க்ஷீணாநாம் தேஹ நாசன:
யாப்யோ வா பலிநாம், தத்வத் க்ஷதஜ: அபிநவௌ து தௌ
ஸித்யேதாம்பி ஸாநாத்யாத்

க்ஷயகாஸம், க்ஷதகாஸம், ஆக இவ்விரண்டும் மெலிந்த நோயாளிகளைக் கொல்லும். மெலிவு இல்லாமல் பலமுள்ள நோயாளிகளுக்கு இவை காணுமாகில் அப்பொழுது அவையாப்யங்களாகும். இவ்விரண்டு நோய்களும் ஆரம்ப நிலைமையில் தகுந்த சிகித்சை செய்தால் பரிஹரிக்கவும் படலாம் என்பது இவ்வசனங்களின் பொருள். இந்த இருவகை காஸங்களையும் நாகபலா என்ற மூலிகை நிவர்த்திசெய்கின்றது என்பது விருத்த வாக்படத்தின் அபிப்பிராயம். இவ்வசனங்களால் நமக்குக் கிடைக்கும் பொருளாவது— க்ஷதகாஸம், க்ஷயகாஸம், இரண்டும் பிறவியிலேயே கடின நோய்கள். இவ்வியாதிகளின் ஆரம்ப நிலைமையில் தகுந்த சிகித்சை அதாவது நாகபலா என்ற மூலிகையை உபயோகித்து வந்தால் குணப்படலாம் என்பதே. நாகபலா சேர்ந்த பல மருந்துகள் வாக்படத்தில் காணப்படுகின்றன. ஆகவே நமது முன்னோர்கள் குணமாகாத நோய்களாக இவைகளைத் தள்ளவில்லை யென்பது புலனாகின்றது. ரக்தவாந்தியுடன் கூடியது க்ஷதகாஸமாகும். ரக்தமில்லாத வகை க்ஷயகாஸமாகும். இவைகளை விவரிப்பது பெருகுமாதலால் பிரகிருதத்தைக் கவனிப்போம். க்ஷய நோயை ஆராய்ச்சி செய்ய உத்தேசமுள்ளவர்கள் இந்த வசனங்களைக் கவனித்து சாஸ்திரங்கள் முக்கியமாகக் கூறும் நாகபலாவைப் பரிசிலனை செய்திருக்க வேண்டியது அவசியமாகும். ரஸக்கிரந்தங்களைப் பரிசீலனைசெய்தால் க்ஷயநோயில் தாளகத்தின் பெருமை தெரியவரும். ஆகவே தாளகத்தை ஆராய்ச்சி செய்வதும் அவசியமாகின்றது. இவை இரண்டுமில்லாமல் க்ஷயரோகத்தில் செய்யப்படும் ஆராய்ச்சி வீணே. (1) ஸர்வாங்கசுந்தரரஸம் (2) ராஜமிருகாங்கம் (3) மஹாப்ரவடிகா (4) காஞ்சனாப்ரம் (5) வசந்ததிலகம் (6) கல்யாணசுந்தராப்ரம் (7) ரத்னகர்பபோட்லீ (8) காஸலக்ஷ்மீவிலாஸம் ஆகிய இவைகள் க்ஷயநோயில் கையாளப்படுகின்றன (இவைகளின் செய்முறையை க்ஷயரோகமும் அதன் சிகித்சையும் என்ற நூலில் பார்க்கவும்) இம்

மருந்துகள் எல்லாவற்றிலும் தங்கசிந்தூரம் சேருகின்றது. ஆகவே தனித்தங்க சிந்தூரம் அனுபவரீதியிலும் சாஸ்திர ரீதியிலும் இந் நோயில் முக்கிய மருந்தாகக்கொள்ள வழியில்லை.

1. **பூநிம்ப குடேச்யாதி கஷாயம்:**—இக்கஷாயம் ஓர் அபூர்வ முறையில் அமையப்பெற்றிருக்கின்றது. இதில் உள்ள மொத்தச் சரக்கு 7. மொத்தம் தோலா 33 ஆகின்றது. 33 தோலா எடையுள்ள சரக்கைக் கஷாயம்போட ஒருபடிஜலம் சொல்லப்பட்டிருக்கின்றது. இது ஓர் விசித்திரம். இந்தக் கஷாயம் சுதேச வைத்திய நூல்களில் காணப்படவில்லை. ஆகவே இக்கஷாயமும் பரம்பரையாக நமது நிபுணருக்குக் கிடைத்துள்ள முறையாகக் காணுகின்றது, 33 தோலா சரக்குக்கு ஒருபடி ஜலம்விட்டுக் கஷாயம் செய்வது எந்த சாஸ்திரத்திற்கும் அனுபவத்திற்கும் பொருந்த வில்லை. 33 தோலா எடையில் 48 அவுன்சு (ஒருபடி யென்பது 48 அவுன்சு ஆகும்.) ஜலம்விட்டு எட்டில் ஒன்றாக வற்றவைத்தால் ஆறு அவுன்சு கஷாயமாகும். வேளைக்கு இரண்டு அவுன்சு கொடுத்தால் ஒரு நாளைக்குள் சரியாகிவிடும். ஒரு மனிதன் ஒரு தோலா சரக்கை கஷாயம் போட்டு ஒருவேளையில் சாப்பிடவேண்டும் என்ற விதியும் அனுஷ்டானமும் இருக்க 33 தோலாவை ஒரு நாளில் சாப்பிடுவது சாத்தியமா என்பதைக்கூட நமது ஆராய்ச்சியாளர் கவனிக்கவில்லை. இந்தக் கஷாயத்தைச் சாப்பிட்டு ஓர் நோயாளி பிழைத்திருக்க முடியுமா என்பதே கேள்வி. **ஆகாரகரபாதி வடகம்**— இந்த வடகமும் சுதேச நூல்களில் காணப்படவில்லை. நமது நிபுணருக்குப் பாரம்பரையாக வந்துள்ள முறையென்று நினைக்கிறோம். இதில் அடங்கியிள்ள மொத்தச் சரக்குகள் எட்டு. சரக்குகள் மொத்த எடை 15கிரெயின்சு 15கிரெயின்சு கொண்ட வடகம் ஒரு நாளில் உபயோகமாகின்றது. இது அதிக இருமலைத்தணிக்க உதவக்கூடும். ஆனால் மெலிந்த சரீரத்தில் ஒரு கிரெயின் அபினி சேர்ந்தால் உண்டாகும் தீமையை நினைக்கும்பொழுதே நமது மனது நடுங்குகின்றது. ஒரு கிரெயின்சு அபினி என்பது வாலிபருக்குக் கொடுக்கும் உத்தம அளவாகும். இதால் மெலிந்த க்ஷய ரோகிக்குப் பலதீங்குகள் உண்டாகும். மலபந்தம், தலை கிறு

கிருப்பு, மயக்கம், வாந்தி, இவைகள் உண்டாகும். அநேகமாய் அபினி மயக்கத்தில் நோயாளி தடுமாறி ஸ்மரணையற்று நெஞ்சில் சேர்ந்துள்ள கபத்தை வெளிப்படுத்த வேண்டுமென்ற உணர்வு இல்லாமலிருந்து கடைசியில் மூச்சுத்திணறி இறக்கவும் நேரிடும். ஆகவே அபின்சேர்ந்த மருந்தை க்ஷய நோயில் உபயோகிக்காம லிருப்பதே நலம். ச்யவனப்பிராசம் போன்றவை க்ஷய நோயில் நல்ல பலனைக் கொடுப்பதில்லை யென்பது பலர் அறிந்த ரகஸியம். கொடீனு என்பது அபினியிலிருந்து எடுக்கப்படும் ஓர் உப்பு. இருமலைத்தணிப்பதற்காக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக் கின்றனர். இதன் உபயோகத்திலும் அபினிக்குள்ள துர்குணங் கள் உண்டாகின்றன. இருமலையும் விசேஷித்துத் தணிப்பதில்லை. சுதேசவைத்திய ஆராய்ச்சியில் புகுந்தவர்கள் இருமலுக்கு ஆங்கில வைத்தியத்தை எதிர்பார்ப்பது விந்தையே. எந்த முறையிலிருந் தும் வைத்தியன் தனக்கு வேண்டிய மருந்துகளை எடுத்துக்கொள் வதில் நமக்கு ஆக்ஷேபமில்லை. நோயாளிக்கு ஆரோக்யத்தை யுண்டுபண்ணுவது ஒன்றுதான் வைத்தியனுடைய முக்கிய நோக்க மாக இருக்கவேண்டும். ஓர் ஆராய்ச்சியாளர் இருமலுக்கு மருந்தை தன் முறையில் கண்டுபிடிக்காமல் பிறர் முறையில் களவாடுவது சகிக்கமுடியாத விஷயமாகும். தவிர கொடினுவில் எதிர்பார்க்கும் குணம் கிடைப்பதில்லை யென்பதையும் கவனிக்கவேண்டும். ரக்த வாந்திக்குச்சொல்லப்பட்ட மூன்று மருந்துகள் விசித்திரமாகவிருக் கின்றன. அம் மூன்றில் ஒன்று சுதேச மருந்து. இரண்டு ஆங் கில மருந்துகளாகும். ஆங்கிலர்கள் ரக்தத்தை நிறுத்த கால்ஷியம் சம்பந்தமான மருந்துகளை இன்ஜக்ஷன் மூலமாகவும் வாய்வழியாக வும் உபயோகிக்கின்றனர். இதில் எந்தமட்டில் பலன் இருக்கிற தென்பதை அனுபவசாலிகள் அறிவர். அல்பமாக வரும் ரக்தம் நின்றுவிடுகிறதென்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். சில நாள் அல்லது பல நாள் உபயோகித்தால் ரக்தம் நிற்கிறது. ஆனால் பல மான ரக்தவாந்தியில் எவ்வளவு நாள் கொடுத்தபோதிலும் பலன் இல்லை என்பதை ஆங்கில வைத்தியர்களே அங்கீகரிக்கின்றனர். மார்பியா என்பது அபினியிலிருந்து எடுக்கப்படும் ஓர் உப்பு.

Registered No. M. 4018.

பண்டிட் நாராயண அய்யங்கார் அவர்களின்

**ருதுசூல நிவாரணீ**

இது கைகண்ட மருந்து. கருப்பையை (கர்ப்பாசயத்தை) ஒழுங்கு செய்து ஆரோக்ய நிலைமையில் வைப்பதுடன் மாவிடாய் காலங்களில் உண்டாகும் வயிற்றுவலி, அதிக ரக்த பெருக்கு, முதலியவைகளைப் பூர்ணமாக நிறுத்தி விடுகின்ற மற்ற மருந்துகளால் அசாத்தியமெனத் தள்ளப்பட்ட பல சூத நோய்களை நிவர்த்தி செய்து பூர்ண ஆரோக்யத்தை யளிக்கின்றது.

உபயோகிக்கும்விதம்—தினம் காலையில் 1 மாத்திரை, சாயங்காலம் 1 மாத்திரை வீதம் மாத்திரையை வாயில் போட்டுக்கொண்டு வெந்நீர் விட்டு விழுங்கவேண்டும். பத்தியம்—அதிகமாக வாயு ப்தார்த்தம் சேராமலிருப்பது நலம்.

ஒரு மாத மருந்து விலை ரூ 10 தபால் செலவு வேறு.

விலாசம்—**பண்டிட் நாராயணய்யங்கார்**

கெ. 2. போலீஸ்ஸ்டேஷன் மேற்கு சந்து மதுரை.

# ஸஹஸ்ரயோகம்.

இது மலையாள தேசத்தில் பிரசித்தமான வட மொழி வைத்ய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. இந்நூலை யனுசரித்தே மலையாளத்தில் மருந்து முறைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்நூலில் கஷாய முறைகள் 184, கிருதமுறைகள் 70, தைலமுறைகள் 85, சூர்ண முறைகள் 89, லேகியமுறைகள் 20, குளிகைமுறைகள் 73, ஜன்னிமருந்துகள் 15, கண்ணோய்களுக்கு மருந்துகள் 92, காதுநோய்களுக்கு மருந்துகள் 6, மூக்குநோய்களுக்கு மருந்துகள் 6, முகரோக மருந்துகள் 3, தொண்டை நோய்களுக்கு மருந்துகள் 6, உள்வாய் ரோகங்களுக்கு மருந்துகள் 5, பலவகை மருந்துகள் 153 ஆக இவ்விதம் மொத்தம் 867 மருந்துகள் வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஒரு நூலே வைத்யர்களுடைய தேவைக்குப் போதுமானது. புத்தகம் விலை ரூ. 1 தபால் கூலி வேறு.

கிடைக்குமிடம்—பண்டிட் நாராயணய்யங்கார்

கெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து மதுரை.

வெங்கடேஸ்வர் பிரஸ் காக்காத்தோப்புத்தெரு, மதுரை—42.